(முதல்நிலை) பேரூராட்சி கோவை 641 007

D

# 1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 201–வது பிரிவின்கீழ் வழங்கப்படும் உரிமம்

## வேடபட்டி பேரூராட்சி அலுவலகம்

## முன்னிலை:– திருமதி. வே. வத்சலா

<u>கட்டிட உரிமம் எண் 03/2014–15</u> <u>நாள். 08.04.2014</u>

பொருள்:– கட்டிட உரிமம் – வேடபட்டி பேரூராட்சி – கோவை மாவட்டம் – வேடபட்டி க.ச.எண் 378/2A 3Aயில் 1417.68 சதுர மீட்டர் கொண்ட இடத்தில் புதிய ஸ்டில்ட் + 4 தளங்களில் 4X7= 28 குடியிருப்புகள் கொண்ட கட்டுமானம் அமைத்து கட்டிடம் கட்டுதல் – அனுமதி வழங்க உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை:– 1) திரு. என். லெனின்கிரி (உரிமையாளர்), மற்றும் பி.கே. சண்முகம் (பவர் ஏஜெண்ட்) கோவை அவர்களது விண்ணப்பம், நாள். 11.10.13, 19.11.13, 23.01.14 மற்றும் 11.03.14

2) கோவை உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள் ந.க. 6224/2013/உதிகு –1, தி.அ.எண் 20 அ.ஆ/2014, நாள். 14.03.2014

***********

உத்திரவு:–

வேடபட்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் புல எண் 378/2A 2A யில் 1417.68 ச.மீ பரப்பு மனைக்கு கோவை உள்ளூர் திட்டக்குழும எண் 20/2014 எண்ணிட்ட மனை ஒப்புதலும் அம்மனையில் ஸ்டில்ட் தளம் 440.85 ச.மீ பரப்பு கொண்ட வாகன நிறுத்துமிடம் மற்றும் முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம், 4ம் தளம் ஆகியவற்றில் தலா 7 குடியிருப்புகள் வீதம் ஆக மொத்தம் 28 குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு பார்வை 1ல் கண்ட சென்னை திரு. எஸ். லெனின்கிரி (உரிமையாளர்) திரு. பி.கே. சண்முகம் (பவர் ஏஜெண்ட்) என்பவர் சமர்ப்பித்துள்ள வரைபடங்கள் மற்றும் பார்வை (2)ல் கண்ட கோவை உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் அவர்களது திட்ட அனுமதியில் கண்ட நிபந்தனைகள் (நிபந்தனைகள் கொண்ட திட்ட அனுமதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளவாறு) " அ முதல் க " வரையில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் 1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 101–வது பிரிவின்கீழ் இவ்வுத்திரவு தேதியிலிருந்து 07.04.2017 வரை மூன்றாண்டு காலத்திற்குள் புதிய 28 குடியிருப்புகள் கொண்ட கட்டிடம் கட்டிக்கொள்ள வரைபடத்தினை திட்டக்குழு அனுமதிக்கிணங்க அங்கீகரித்து அனமதி வழங்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1. கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதியை கட்டிட வேலை முடிந்த பதினைந்து தினங்களுக்குள் இவ்வலுவலகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும்

2. சர்க்கார் நிலத்திலும் பொதுச் சாலைகளிலும் ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது.

3. இந்த உரிமத்தில் கண்ட கால அளவிற்குப் பிறகு மனு செய்து உரிமம் புதுப்பிக்காமல் கட்டிட வேலை செய்யக் கூடாது.

4. அனுமதிக்கப்பட்ட கால அளவிற்குள் கட்டி முடிக்கப்படாத கட்டிடங்களுக்கான உரிமம் புதுப்பித்துக்கொள்ள 50 சதவீத உரிமக் கட்டணம் செலுத்தி 15 நாட்களுக்குள் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

5. மாறுதல் செய்ய வேண்டுமானால் திட்டக்குழுமத்திற்கு இவ்வலுவலகம் மூலம் மீண்டும் வரைபடங்கள் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்று கட்டட வேலை செய்ய வேண்டும்.

6. விண்ணப்பதாரர் உரிமத்தையும் வரைபடத்தையும் கட்டிடம் கட்டுமிடத்தில் வைத்திருக்க வேண்டும். பேரூராட்சி அலுவலக அதிகாரம் பெற்ற அதிகாரிகள் வந்து கேட்கும் போது காண்பிக்க வேண்டும்

7. உரிமக் கட்டுப்பாட்டிற்கும், உரிமம் பெற்ற வரைபடத்திற்கும் மாறாக செய்தாலும், நகராட்சி சட்டத்திற்கோ அல்லது வேறெந்த சட்ட திட்டங்களுக்கு மாறாக உரிமம் பெற்று இருந்தாலும், உண்மைகளை மறைத்து தவறான வழியில் உரிமம் பெற்று இருந்தாலும் இந்த உரிமம் தள்ளுபடி செய்யப்படும்.

8. கொடுக்கப்பட்ட தகவல்கள் தவறானதாக இருந்தாலோ பொது இடத்தில் ஆக்கிரமிப்பு இருந்தாலோ இவ்வனுமதி செல்லத்தக்கதல்ல.

9. இக்கட்டிடம் 07.04.2017 ம் தேதிக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் பிரத்தியேகமாக அனுமதிக் கட்டணம் செலுத்தி பெற்றபின் மேற்கொண்டு கட்டிட வேலை செய்ய வேண்டும்

10. கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவு நீரை பொதுப்பாதையில் விடாமல் உரிமதாரர் காம்பவுண்டுக்குள் செஸ்பூல் கட்டி அப்போதைக்கப்போது சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

11. மனைப்பிரிவிற்கு தேவையான வசதிகள் யாவும் மனைப்பிரிவு நில உரிமையாளரால் செய்து கொடுக்கப்பட வேண்டும். இந்த நிலப்பிரிவில் நில உரிமையாளரால் விதிகளின்படி தேவையான அனைத்து வசதிகளையும் செய்ய வேண்டும்.

12. மழைநீர் சேகரிப்பு தொட்டி கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்

13. நிலக்கரி சாம்பலில் தயார் செய்யப்பட்ட நவீன இரக செங்கல் கட்டிடத்திற்கு பயன்படுத்த வேண்டும்

14. வரிவிதிப்பு செய்ய வரும்போது மழைநீர் கட்டமைப்பு அமைத்த புகைப்படம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

வே. வசந்தா 8/4/14
செயல் அலுவலர்
வேடபட்டி பேரூராட்சி
கோவை – 641 007

8/4/2014

பெறுநர்:–

திரு.எஸ்.லெனின்கிரி(உரிமையாளர்)
திரு. பி.கே. சண்முகம் (பவர் ஏஜெண்ட்)
21/22, மாரியம்மன் கோவில் தெரு
மேற்கு கே.கே. நகர் சென்னை – 600078

சம்பந்தப்பட்ட வார்டு வரித்தண்டலருக்கு கட்டிடம் முடிவடைந்ததும் வரி விதிப்பிற்காக மாதாந்திர பட்டியலில் சேர்த்து அறிக்கை சமர்ப்பிக்க

# கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை: திரு. ச. சந்திரசேகரன், பி. டெக்., எம். பிளான்.,

ந.க.எண். 6224 / 2013 / உதிகு - 1 நாள்: 14.03.2014
தி.அ. எண். 70 அ, ஆ / 2014
உள்ளாட்சியின் பெயர்: வேடபட்டி பேரூராட்சி

பொருள் : திட்ட அனுமதி - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் - வேடப்பட்டி பேரூராட்சி மற்றும் கிராமம் - க.ச. எண் 378/2A3A ல் 1417.68 ச.மீ பரப்புக் கொண்ட மனையில், மனை ஒப்புதலுடன் ஸ்டில்ட் + 4 தளங்களில் (4 x 7) 28 குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு - திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. மனுதாரர் திரு. என். லெனின்கிரி, (உரிமையாளர்) மற்றும் திரு. பி. கே. சண்முகம் (பவர் ஏஜென்ட்), கோயம்புத்தூர் என்பவர் விண்ணப்பம் நாள் 11.10.2013, 19.11.2013, 23.01.2014 மற்றும் 11.03.2014
2. செயல் அலுவலர், வேடபட்டி பேரூராட்சி, கடிதம் ந.க. எண் 514 / 2013, நாள் 05.11.2013
3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும தீர்மானம் நாள் 28.01.2014
4. வளர்ச்சிக் கட்டணம் செலுத்தப்பட்ட நாள் 11.03.2014

-----0--------

**உத்திரவு:**

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம், வேடப்பட்டி பேரூராட்சி மற்றும் கிராமம் - க.ச. எண் 378/2A3A -ல் 1417.68 ச.மீ பரப்பு மனைக்கு **"ABCDEF"** என எல்லையிட்டும், வரைபடத்திற்கு **ம.வ/கோ.உதிகு. எண் 67/2014** என எண்ணிட்டு மனை ஒப்புதலும், அம்மனையில் ஸ்டில்ட் தளம் : 440.85 சமீ (வாகன நிறுத்துமிடம்), முதல் தளம் : 440.85 சமீ (7 குடியிருப்புகள்), 2ஆம் தளம் : 440.85 சமீ (7 குடியிருப்புகள்), 3ஆம் தளம் : 440.85 சமீ (7 குடியிருப்புகள்) 4ஆம் தளம் : 440.85 சமீ (7 குடியிருப்புகள்), Lift and Head Room Area : 18.60 சமீ., Balcony Area (5%) : 92.70 சமீ மொத்தம் 28 குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு **திட்ட அனுமதி எண் 70 அ, ஆ/ 2014** என்ற எண்ணில் **14.03.2014** முதல் 3 (மூன்று) வருட காலத்திற்கு கீழ்காணும் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

### நிபந்தனைகள்

(அ) மேலும் இந்த திட்டஅனுமதியானது பிரிவு 49 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35-1972)ன்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.

(ஆ) பிரிவு 80, நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (சட்டம் 35-1972)ன்படி எந்த நபராவது இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64 (1)-ன்கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர் / அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

(இ) கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்ட அனுமதி அளித்த பிறகு

1. திட்ட அனுமதி பெற தவறான விவரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ.,
2. சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ, உறுப்பினர் செயலர், மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

(ஈ) 1. அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002-ன்படி மழைநீர் சேகரிப்பு குழிகள் வரைபடத்தில் காட்டியுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும்.
2. குளியல் அறை மற்றும் Wash Basin கழிவுநீர் சுத்திகரித்து கழிப்பறைகளுக்கு பயன்படுத்தும் வகையில் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

(உ) சூரிய வெப்ப கட்டமைப்பு (Solar Water Heating System) அமைக்கப்பட வேண்டும்.

(ஊ) மனையில் கட்டிடம் கட்டும்போது Fly Ash Bricks & Materials கண்டிப்பாக பயன்படுத்தப்பட வேண்டும்.

(எ) வரைபடத்தில் காட்டியுள்ளவாறு பக்கத்திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

(ஏ) அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 3.11.2004-ன் படி கட்டிடத்தில் U Trap in the septic tank design அமைக்கப்பட வேண்டும்.

(ஐ) கட்டிடத்தில் மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

(ஒ) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத் தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்

(ஓ) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் நிறுவனம் மற்றும் பொறுப்பாளர் குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஆகியவற்றை மனுதாரர் தம் சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

(ஔ) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவிற்கு தீத்தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

(ஃ) திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் Lamination செய்து காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.

(க) The Applicant / developer and also the architects / Licensed Surveyors and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

(கா) கட்டடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஓயரிங் செய்யப்பட வேண்டும்.

(கி) கோயம்புத்தூர் பகுதியானது Seismic Zone - III ஆக வரையறுக்கப்பட்ட பகுதியில் அமைவதால் கட்டிடத்தில் நில அதிர்வை தாங்கும் முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(கீ) திட்ட அனுமதி செயலாணை கடிதத்தினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின்கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(கு) வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு, அக்கட்டிடத்திற்கு / மனைப்பிரிவு அபிவிருத்திக்கு வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (கோயம்புத்தூர் மாநகராட்சி உட்பட) பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(கூ) கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் உள்ளாட்சி சட்டத்தின்படி வரிவிதிக்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு / மனைப்பிரிவு அபிவிருத்திக்கு இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ன்படி நடவடிக்கை ஏதுவாக எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொறுப்பு)
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
கோவை - 12.

**இணைப்பு**

முத்திரையிட்ட வரைபடம் - 2 தொகுப்பு

**பெறுநர்**

செயல் அலுவலர்,
வேடபட்டி பேரூராட்சி,
கோயம்புத்தூர்.

**நகல்** (உள்ளாட்சி வழியாக)

திரு. என். லெனின்கிரி, (உரிமையாளர்)
திரு. B. K. சண்முகம், (பவர் ஏஜண்ட்)
21/22, மாரியம்மன் கோவில் தெரு,
மேற்கு கே. கே. நகர்,
சென்னை - 600 078.

9

D

**கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு)**
**அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை: திரு. எஸ்.தனராசு , பி.இ.,**
**திட்ட அனுமதி**
**நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 50-ன் கீழ்**

ந.க.எண். 1733/2017/ உ.திகு- 1 நாள்: 4.08.2017

பொருள் : திட்ட அனுமதி – சிறப்புக்கட்டிடம் - கோயம்புத்தூர் உள்ளூர்திட்டக் குழுமம் கோயம்புத்தூர் மாவட்டம் - கோவை வட்டம் ,வேடப்பட்டி பேரூராட்சி மற்றும் கிராமம், நிலஅளவைஎண்.378/2A3A, மனைப்பரப்பு – 1417.68 சதுரமீட்டரில் மனை ஒப்புதலுடன் Stilt + 4 தள 28 குடியிருப்பு - கொண்ட கட்டிடம் கட்ட திட்ட அனுமதி பெறப்பட்டது – திட்ட அனுமதி எண் 70(அ,ஆ)/ 2014. நாள்.14.3.14 –என்ற எண்ணில் வழங்கப்பட்ட திட்ட அனுமதியினை நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 50 - ன் படி புதுப்பித்து வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர்(பொ) அவர்களின் நடவடிக்கைகள் எண் 6224/2013/உ.திகு1 நாள் 14.3.2014, திட்ட அனுமதி எண்.70 (அ,ஆ)/2014.
2. மனுதாரர் திரு.பி.கே.சண்முகம், (POA), கோயம்புத்தூர் அவர்களின் விண்ணப்பம் நாள் 10.8.16 மற்றும் 31.3.2017.
3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும தீர்மானம் எண். 17 , நாள். 28.7.2017.

உத்தரவு :

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டப் பகுதி, கோயம்புத்தூர் மாவட்டம் - கோவை வட்டம் ,வேடப்பட்டி பேரூராட்சி மற்றும் கிராமம், நிலஅளவைஎண்.378/2A3A, மனைப்பரப்பு – 1417.68 சதுரமீட்டரில் மனை ஒப்புதலுடன் Stilt + 4 தள 28 குடியிருப்புகள் கொண்ட கட்டிடத்திற்கு பார்வை 1-ல் கண்ட நடவடிக்கைகளில் வழங்கப்பட்ட திட்ட அனுமதி எண் 70(அ,ஆ)/ 2014/14.3.2014-யினை 14.3.2017 லிருந்து மேலும் மூன்றாண்டு காலத்திற்கு திட்ட அனுமதி காலத்தினை நீட்டித்து திட்ட அனுமதி புதுப்பித்து வழங்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

ஏற்கனவே வழங்கப்பட்ட திட்ட அனுமதி எண் 70(அ,ஆ)/ 2014/14.3.2014/நாள்14.3.14 -ல் இடப்பட்ட அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.
மனுதாரர் உள்ளாட்சியில் தேவையான கட்டிட உரிமத்தினை புதுப்பித்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

4/8/17

உறுப்பினர் செயலர்(பொ),
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்
கோயம்புத்தூர் -12

4/8/17

பெறுநர்
செயல் அலுவலர்,
வேடப்பட்டி பேரூராட்சி,
கோவை வட்டம் கோவை மாவட்டம்.
**நகல் : மனுதாரர்**
திரு.B.K.சண்முகம் (POA)மற்றும்
திரு.என்.வெள்ளங்கிரி (உரிமையாளர்)
எண்.21/22, மாரியம்மன் கோவில் தெரு,
மேற்கு கே.கே.நகர்
சென்னை-600 078.